பக்கங்கள் 17+3

# மாலை முரசு

முழுக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 16 திங்கட்கிழமை 01.09.2025 | அதிர்வு 32

## எனக்கு ஆதரவளித்த சகலருக்கும் நன்றி!

### விரைவில் சந்திப்போம் என்று ரணில் தெரிவிப்பு

CLICK HERE VIDEO



"நான் கைது செய் யப்பட்டபோது என் னுடன் நின்ற

04

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# இராணுவத்தினரின் தேவைக்காக வடக்கில் சுவீகரிக்கப்பட்ட காணிகள் விடுவிக்கப்படும்

## யாழ். வந்த ஜனாதிபதி அநுர உறுதி

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

வடக்கில் கடந்த போரின் போது பாதுகாப்புப் படையினரின் பயன்பாட்டுக்காகக் கையகப்படுத்தப்பட்ட மக்களின் காணிகளில், விடுவிக்கக்கூடிய அனைத்து காணிகளும் விடுவிக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உறுதியளித்தார். .

மீனவ சமூகத்துக்குத் தேவையான வசதிகளை வழங்குவது அரசின் பொறுப்பு என்றும், வடக்கில் மீன்பிடித் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம்

04





## மயிலிட்டியில் காணி உரிமையாளர்களுடன்

# பொலிஸ் அடாவடி!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் மூன்றாம் கட்டத்தை ஆரம்பிக்கச் சென்ற ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் கவனத்தை ஈர்க்கும் வகையில் வலிகாமம் வடக்கில் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள காணிகளின் உரிமையாளர்கள் போராட்டத்தை முன்னெடுக்க முயன்ற போது பொலிஸார் அடாவடியில் ஈடுபட்டனர்.

04



# குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலகம் இன்று திறப்பு

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ். குடாநாட்டு மக்களின் மக்களின் நீண்டகால குறைபாட்டைப் பூர்த்தி செய்யும் வகையில் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் யாழ்ப்பாணம் பிராந்திய அலுவலகத்தை இன்று முற்பகல் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க திறந்து வைத்தார்.

தற்போதைய அரசின் முன்னுரிமைத் திட்டமாக டிஜிட்டல் மயமாக்கல் செயற்படுத்தப்பட்டுள்ளது எனவும், அடுத்த ஆண்டுக்குள் பொதுமக்கள் அரசுடனான அனைத்து பணக்கொடுக்கல் வாங்கல்களையும் இணையவழியில் மேற்கொள்ளும் வசதியை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது எனவும் இந்நிகழ்வில் உரையாற்றும்போது ஜனாதிபதி தெரிவித்தார்.

இவ்வளவு காலமும் கொழும்புக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த அனைத்து நிர்வாக நடவடிக்கைகளும் தொலைதூர கிராமங்களுக்குப் பரவலாக்கப்பட்டு, அரசு செய்யவேண்டிய பணிகளை, நெருக்கமாக முன்னெடுப்பதற்கு மக்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி உரையாற்றும்போது மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்ட செயலகக் கட்டடத்தின் 60ஆம் ஆண்டை முன்னிட்டு வெளியிடப்பட்ட தபால் முத்திரை யாழ். மாவட்ட அரச அதிபரால் ஜனாதிபதிக்கு இதன்போது வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால, இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பிரதி அமைச்சர்களான உபாலி சமரசிங்க, சுனில் வட்டகல, நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், ஜெ.ரஜீவன், ச.ஸ்ரீபவானந்தராஜா வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ். மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.















# மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தின் அபிவிருத்திப் பணி இன்று ஆரம்பம்

**(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)**

யாழ்ப்பாணம், மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் மூன்றாம் கட்டத்தை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இன்று ஆரம்பித்து வைத்தார்.

இதன் கீழ், வடக்கு மாகாணத்தில் உள்ள மீனவ சமூகம் மாத்திரமன்றி, கிழக்கு மற்றும் தெற்கு மாகாணங்களில் இருந்து வரும் மீன்பிடி படகுகளுக்கும் நீர், மின்சாரம், எரிபொருள் போன்ற அத்தியாவசிய வசதிகள், குளிர்பதன சேமிப்பு வசதிகள், வலை தயாரிப்பு நிலைய வசதிகள், ஏலவிற்பனை மண்டப வசதிகள் மற்றும் தொடர்பாடல் பரிமாற்ற மைய வசதிகள் என்பனவும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக இந்த ஆண்டு அரசு 298 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல, காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம், கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் செயலாளர் மற்றும் வடக்கு மாகாண அரச அதிகாரிகள், பாதுகாப்புப் படை பிரதானிகள் மற்றும் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.









# கச்சதீவில் ஜனாதிபதி அநுர





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்துக்கு இன்று காலை வருகை தந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, மாலை கச்சதீவுக்கும் அவசர பயணம் மேற்கொண்டார்.

வடக்குக்கு இரு நாள் பயணமாக இன்று வருகை தந்த ஜனாதிபதி மாலை 5 மணியளவில் ஊர்காவற்றுறையில் இருந்து கடற்படையினரின் 4 படகுகளில் கச்சதீவுக்கும் பயணமானார்.

கச்சதீவைப் பார்வையிட்ட ஜனாதிபதி மாலை 6 மணிக்கு மீண்டும் யாழ்ப்பாணம் நோக்கி பயணத்தை ஆரம்பித்துள்ளார்.

தமிழகத்தில் அரசியல்வாதியாக உருவெடுத்துள்ள நடிகர் விஜய் அண்மையில் கச்சதீவை மீளப் பெறவேண்டும் என்ற சர்ச்சைக்குரிய பேச்சின் பின்னர் ஜனாதிபதி அநுரகுமார கச்சதீவுக்குப் பயணித்தமை அரசியல் ரீதியில் பெரிதும் பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் இன்று ஒரு நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி, "கச்சதீவு இலங்கைக்குரியது. அதை வேறு யாருக்கும் விட்டுக் கொடுக்க முடியாது." – என்று வலியுறுத்திக் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இராணுவத்தினரின்...

மீனவ சமூகத்துக்குத் தேவையான வசதிகளை வழங்கவும் அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

யாழ். மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் மூன்றாம் கட்டத்தை ஆரம்பித்து வைக்கும் இன்றைய நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் கூறினார்.

கடந்த அரசுகள் போரை எதிர்பார்த்து பணியாற்றிய போதிலும், இந்த நாட்டில் மீண்டும் எந்தவிதமான யுத்தமும் ஏற்படாத வகையில் நாட்டில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்பத் தற்போதைய அரசு பாடுபடுகின்றது என்றும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

நாட்டைச் சுற்றியுள்ள கடல், தீவுகள் மற்றும் காணிகளை மக்களுக்காகப் பாதுகாப்பதில் அரசு உறுதியாக உள்ளது என்றும், அதில் எந்தவிதமான அழுத்தத்துக்கும் இடமளிக்கப்படாது என்றும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

### எனக்கு ஆதரவளித்த...

அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உங்கள் அனைவரையும் விரைவில் சந்திக்க எதிர்பார்க்கின்றேன்."

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட காணொளியொன்று ஊடாக இன்று அறிவித்தார்.

அந்தக் காணொளி இந்தச் செய்தியுடன் இணைக்கப்பட்டுள்ளது.

### பொலிஸ்...

முதியவர்கள், பெண்கள் என வேறுபாடின்றி மிக மோசமான முறையில் அவர்களை அங்கிருந்து பொலிஸார் அப்புறப்படுத்தினர்.

அதேவேளை, இந்தச் சம்பவத்தைச் செய்தியாக்க முயன்ற ஊடகவியலாளர்களையும் பொலிஸார் மிரட்டி தகாத வார்த்தைகளால் பேசி துரத்தியடித்தனர்.

மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தின் மூன்றாம் கட்ட அபிவிருத்திப் பணிகள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதன்போது, கடந்த 35 வருடங்களுக்கு மேலாகத் தமது சொந்த இடங்களில் இருந்து வெளியேறி தற்காலிக இடங்களில் வசிக்கும் மக்கள் தமது காணிகளை விடுவிக்குமாறு கடந்த பல வருடங்களாகக் கோரி வருகின்றனர்.

இந்நிலையில் இன்னமும் காணிகள் விடுவிக்கப்படாமல் உள்ள காணிகளின் உரிமையாளர்கள், ஜனாதிபதியின் கவனத்தை ஈர்க்கும் வகையில் மயிலிட்டிப் பகுதியில் வீதியோரமாக அமைதியான முறையில் கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்த முயன்றனர்.

இதையடுத்து அங்கு வந்த பொலிஸார், முதியவர்கள் – பெண்கள் என்ற வேறுபாடுகள் இன்றி, அவர்களை மிக மோசமான வார்த்தைகளால் திட்டி, அவர்களைத் தமது பலத்தைப் பயன்படுத்தி அங்கிருந்து அப்புறப்படுத்தினர்.

பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இன்றி, பெண்களை ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தள்ளி, தகாத வார்த்தைகளால் பேசி அப்புறப்படுத்தினர்.

இந்தச் சம்பவத்தைச் செய்தியாக்கச் சென்ற ஊடகவியலாளர்களையும் பொலிஸார் அச்சுறுத்தி அங்கிருந்து துரத்தியடித்தனர்.

மக்களின் காணிகள் மக்களுக்கே எனக் கூறி ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, தான் பதவியேற்று ஒரு வருடம் பூர்த்தியாவதை முன்னிட்டு அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைக்க வந்த வேளை, எமது காணிகளை விடுவியுங்கள் என அவரின் கவனத்தை ஈர்க்கும் முகமாக நாம் போராட்டத்தை நடத்த முற்பட்ட போது கடந்த கால அரசு போன்றே, பொலிஸார் எம் மீது காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்டுள்ளார்.

மாற்றம் எனக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், தமிழ் மக்கள் விடயத்தில் மாற்றத்தை விரும்பவில்லை என்பதே பொலிஸார் எம்முடன் நடந்து கொண்ட விடயம் சான்று பகிர்கின்றது எனக் காணி உரிமையாளர் ஒருவர் கவலையுடன் தெரிவித்தார்.








நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஆப்பிழுத்த அமெரிக்கா!

சர்வதேச அரசியலில் இப்போது பரபரப்பாகப் பேசப்படும் விடயம் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் முட்டாள்தனமான ராஜதந்திரம் தான்.

ஏற்கனவே அதனை இப்பத்தியில் 'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்த ஆண்டி' என்று விமர்சித்திருந்தோம். அதற்கு மேலே போய் இப்போது அவர் 'ஆப்பிழுத்த குரங்காக' தாம் விரித்த வலையில் தாமே சிக்குப்பட்டு அல்லாடும் நிலைக்குச் சென்றிருக்கின்றார் என்று சர்வதேச ஆய்வாளர்கள் பலரும் விமர்சிக்கின்றார்கள்.

தன்னிடம் இருக்கும் பொருளாதார வலிமையை வைத்துக்கொண்டு, இந்தியா உட்பட எல்லா நாடுகளுக்கு எதிராகவும் ஒரு பொருளாதாரப் போரைக் கண் மூடித்தனமான வரி விதிப்புகள் மூலம் பிரகடனப்படுத்தினார் ட்ரம்ப். அந்த அசட்டுத்தனமான - அபத்தமான - நடவடிக்கை மூலம் மற்றைய நாடுகளைத் தங்களுக்குள் ஒற்றுமைப்பட்டு அமெரிக்க அச்சுறுத்தலை முறியடிப்பதுதான் ஒரே வழி என்ற தீர்மானத்துக்குள் தள்ளும் ஒரு முட்டாள்தனமான ராஜதந்திரத்தை தெரிந்தோ தெரியாமலோ கட்டவிழ்த்து விட்டு விட்டு, இப்போது அல்லாடுகிறார் டொனால்ட் ட்ரம்ப் என்பது பலரதும் விமர்சனமாக இருக்கின்றது.

தன்னுடைய முட்டாள்தனமான நடவடிக்கைகளினால் தன் பக்கம் இருந்த - தன் தலைமையில் இருந்த - நேட்டோ நாடுகளின் அமைப்பு, ஜி7 நாடுகளின் அமைப்பு போன்றவற்றின் பொருளாதார ஒத்துழைப்புகளை சின்னாபின்னமாக்கி, நீண்ட காலம் நட்புறவிலிருந்து அயல்தேசங்களான கனடா போன்றவற்றை பொருளாதார ரீதியில் நசுக்க முற்பட்டு, அவற்றுடனும் பகைத்து, இப்போது தனித்துப் போய் நிற்கின்றது அமெரிக்கா.

அமெரிக்க நடவடிக்கைகளினால் - குறிப்பாக டொனால்ட் ட்ரம்ப்பின் 'எடுத்தேன், கவிழ்த்தேன்' என்ற போக்கினால் - இப்போது உலக அதிகார மையம் மெல்ல அமெரிக்க தலைமையில் இருந்து ஆசிய பக்கம் நகர்ந்து கொண்டிருக்கின்றது.

சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சீனா, ரஷ்யா, இந்தியா ஆகியவை தங்களுக்குள் இருந்த வேற்றுமைகளை அடியோடு களைந்து, பொருளாதாரப் போர் தொடுத்திருக்கும் பொது எதிரியான அமெரிக்காவை வீழ்த்த கைகோர்த்து நிற்கின்றன.

அதற்கு கடந்த வாரம் சீனாவின் தியான்ஜென்னில் நடைபெற்ற ஷங்காய் கூட்டுறவு இயக்க மாநாடு நல்ல வழி செய்து இருக்கிறது. அங்கு ரஷ்யா, சீனா, இந்தியா, ஈரான், துருக்கி போன்றவை ஒன்று சேர்ந்து அமெரிக்கப் பொருளாதாரப் பொது எதிரியை எதிர்கொள்ளத் தங்களுக்குள் கூட்டணி வைத்திருக்கின்றன. இந்த ஐந்து நாடுகளின் கூட்டு உலகளாவிய ரீதியில் 40 வீத ஜனத்தொகையையும் 30 வீத பொருளாதாரத்தையும் உள்ளடக்கியது என்பது முக்கிய விடயமாகும்.

இதேசமயம் இதுவரை காகிதக் கட்டமைப்பாக இருந்த 'பிரிக்ஸ்' அமைப்பு இப்போது அமெரிக்காவுக்கு எதிராகப் பொருளாதார ரீதியில் ஒன்றுபட்டு எழுவதற்குத் தயாராகியிருக்கின்றது. பிரேசில். ரஷ்யா, இந்தியா, சீனா, தென்னாபிரிக்கா உட்பட 10 நாடுகளைக் கொண்ட பிரிக்ஸ் அமைப்பு, அமெரிக்க டொலரை வீழ்த்தும் விதத்தில் சர்வதேச வர்த்தகத்தை தங்களுக்கு ஏற்ற விதத்தில் பொது நாணயத்தாள் ஒன்றின் அடிப்படையில் மேற்கொள்ள முடிவு செய்திருக்கின்றன. அடுத்த வருடம் இந்தியத் தலைமையில் பிரிக்ஸ் நாடுகளின் கூட்டம் நடைபெறும் போது பெரும்பாலும் அமெரிக்க டொலர் அல்லாத பொது நோட்டு ஒன்றை உருவாக்குவதற்கான இணக்கம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இவை ஒருபுறம் என்றால், சீனாவுடனான எல்லை தகராறு மற்றும் பாதுகாப்பு முரண்பாடுகளை முழுமையாக களைந்து, நட்புறவைப் பேணவும், ரஷ்யாவோடு நீண்டகால வலிமையான பாதுகாப்பு ஒப்பந்தத்தை செய்யவும் புதுடில்லி தீர்க்கமான முடிவுகளை எடுத்திருக்கின்றது.

இவை சர்வதேச அதிகார மையம் அமெரிக்கப் பக்கத்திலிருந்து ஆசிய பக்கத்துக்கு திரும்புகின்றது என்பதற்கு தெளிவான வெளிப்படுத்தல்கள். தேவையில்லாமல் அளவுக்கு அதிகமாக சண்டப்பிரசண்டம் பண்ணப் போன அதிபர் டிரம்ப்பின் அபத்தமான துடுக்குத்தனம் அந்த நாட்டின் சர்வதேச தலைமைத்துவப் பதவியை அடியோடு வாரிவிட்டு இருக்கின்றது என்பதுதான் உண்மை நிலைவரம்.

# அரசியல் நோக்கம் எதுவுன்றி முற்றிலும் சமூகத்தின் நன்மை கருதியே திட்டங்கள்!

## SLOGAN அங்குரார்ப்பண நிகழ்வில் அதன் பணிப்பாளர் கலாநிதி சாதிக் தெரிவிப்பு




(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

அரசியல் நோக்கம் எதுவுமின்றி முற்றிலும் சமூகத்தின் நன்மை கருதியே , வெளிநாட்டு இலங்கையர் குழுமத்தின் ளுடுழுபுயுூ எதிர்காலத் திட்டங்கள், இலக்குகள் இருக்கும் என்று குழுமத்தின் பணிப்பாளரும் பொறியியலாளருமான கலாநிதி ஏ.எம்.ஐ. சாதிக் தெரிவித்தார்.

தேசத்துக்கான நடவடிக்கை, வெளி நாட்டு இலங்கையர் குழுமத்தை (SLOGAN) சாய்ந்தமருதில் அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வு சாய்ந்தமருது சீ ப்ரீஸில் இடம்பெற்றது.

சாய்ந்தமருதில் SLOGAN குழுமத் தினை அங்குராப்பணம் செய்து வைக் கும் இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ளுடுழுபுயுஏ எனப்படும் வெளிநாட்டு இலங்கையர்கள் குழு தேசத்துக்கான நடவடிக்கை என்பது வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கை நிபுணர்களின் ஒரு பாரபட்சமற்ற சிவில் சமூக வலை யமைப்பாகும். அவர்கள் அமைதியான, வளமான, சமத்துவமான மற்றும் நீதியான இலங்கையை விரும்புகின்றனர். அத் துடன் வரலாற்றில் இந்த முக்கியமான கட்டத்தில் அதற்காக பங்களிக்கவும் விரும்புகின்றனர்.

அந்த அடிப்படையில் SLOGAN நாட்டில் அதன் பல சமூக, பொருளா தாரத் திட்டங்களைச் செயற்படுத்தும் போது, ஒரு சிந்தனைக் குழுவாகவும் தன்னார்வ நிபுணத்துவக் குழுவாகவும் செயற்படுவதை நோக்கமாகவும் கொண் டுள்ளது. SLOGAN எனும் நிறுவன அமைப்பு ஒன்பது துணைக்குழுக்களைக் கொண்டுள்ளது. அவை குறிப்பிட்ட பாடப் பகுதிகளைக் கையாளுகின்றன. ஒரு தலைவர் தலைமையிலும், தலைவர்கள் குழு மற்றும் மூத்த உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு இவை யனைத்தும் ஒருங்கிணைப்பாளரால் ஒருங்கிணைக்கப்படுகின்றன. ஒவ் வொரு துணைக்குழுவும் எட்டு உறுப் பினர்கள்வரை கொண்டுள்ளது.

இலங்கையைச் சேர்ந்த வெளிநாட் டினர், அதாவது இங்கிலாந்து, ஐரோப்பா, கனடா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் போன்ற நாடுகளில் வாழும் உயர்மட்ட இலங் கையர் நிபுணர்களைக் கொண்ட சிவில் சமூக அமைப்பாகவும் இந்த SLOGAN அமைப்பு காணப்படுகின்றது.

பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கல்வி யலாளர்கள், மருத்துவர்கள், சட்டத்தரணி கள் என்று ஏராளமான கல்வி சமூகத்தைச் சேர்ந்த புத்திஜீவிகள் இந்த அமைப்பிலே பிரதிநிதிகளாக இருக்கின்றனர். அமைதி யானதும், செழிப்பானதும், நீதியான தும், சமத்துவமானதுமான இலங்கை தேசத்தை கட்டி எழுப்புவதற்கு அதற் கான நிபுணத்துவ பங்களிப்பை கொண்ட அடிப்படையிலே நாங்கள் இந்த அமைப் பின் ஊடாக நல்லதொரு தேசத்தை கட்டி எழுப்ப வேண்டும்.

தற்போது, இணைப்பில் சுமார் எண்பது உறுப்பினர்கள் உள்ளனர், அவர்கள் அனைவரும் உயர் தகுதி வாய்ந்த நிபுணர்கள. அனைவரும் இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த வெளிநாட்டவர். அவர்கள் இங்கிலாந்து, ஐரோப்பா, கனடா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் வசிக்கின்ற னர். உறுப்பினர்களில் ஐந்து சதவீதம் இலங்கையைச் சேர்ந்த உறுப்பினர்களுக் காக ஒதுக்கப்பட்டுள்ளது. – என்றார்.

மேலதிக விவரங்களை www.slogan.global என்ற இந்த இணையத் தளத்துக் குச் செல்வதன் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

# திருகோணமலையில் இரு நூல்கள் வெளியீடு!

(ஹஸ்பர் ஏ.எச்)

நீங்களும் எழுதலாம் வாசகர் வட் டத்தின் ஏற்பாட்டில் கவிஞர் எஸ். ஆர். தனபாலசிங்கத்தின் “காலநதியின் சில துளிகள்” என்னும் கட்டுரை நூலும் “வீரனாக்குவது எது?” என்னும் மொழி பெயர்ப்புக் கவிதைத் தொகுப்பு நூலும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வு எதிர்வரும் (06) சனிக் கிழமை மாலை 3.30 மணிக்கு திரு கோணமலை குளக்கோட்டன் மண்ட பத்தில் இடம் பெறவுள்ளது.

திருகோணமலை தமிழ்ச் சங்கத் தலைவர் மூத்த எழுத்தாளர் திரு மலை நவம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை அதிதியாக கிழக்குப்பல்கலைக்கழகப் பேராசிரியர் வ. கனகசிங்கமும் சிறப்பு அழைப் பாளர்களாக ஓய்வுநிலை நீதிமன்றப் பதிவாளர்களான எம்.எஸ். எம். நஸீர், கெ. தர்மகுலராஜா ஆகியொரும் சிறப் புறும் ஆளுமையாக ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் ஒ. குலேந் திரனும் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் வரவேற்புரையைத் தனுஷ்கா சஞ்சிவனும் நூல் அறிமுக வுரையினை கவிச்சுடர் சிவரமணி, இ. கேசிகன் ஆகியோரும் நூல் மதிப் பீட்டுரையை இலக்கிய ஆய்வாளர் வ.முரளிதரன், ஒய்வு நிலை நீதிமன்றப் பதிவாளர் எம். எஸ். எம். நியாஸ் ஆகி யோரும் நிகழ்த்தவுள்ளனர்.

நீங்களும் எழுதலாம் இலக்கிய சிற் றிதழும் அதன் சார்பு இயக்கு நிலையும் தொடர்பில் சிரேஷ்ட ஊடகவியலாளர் அ. அச்சுதன் உரையாற்றுவார்.

நிகழ்வை அதிபர் சுஜந்தினி யுவராஜா தொகுத்து வழங்க நூலின் முதல் பிர தியை மூத்த எழுத்தாளர் ஆசை எட்வேட் பெற்றுக்கொள்வார்.

தொடர்ந்து கௌரவிப்பு நிகழ்வும் நூலாசிரியரின் ஏற்புரையும் இடம் பெறும்.

# பெரியகல்லாறு உதயபுரம் தமிழ் வித்திக்கு ஒலிபெருக்கி சாதனங்கள் வழங்கப்பட்டன

**(வாலகிருஸ்ணா)**

மட்டக்களப்பு, பெரியகல்லாறு, உதய புரம் தமிழ் வித்தியாலயத்தின் நீண்டகாலத் தேவையாக இருந்த ஒலிபெருக்கி சாதனங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக ஒலிபெருக்கி சாதனங்கள் இல்லாத காரணத்தினால் தமது நிகழ்வுகளை நடத்துவதில் பாடசாலை மாணவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுவந்தனர்.

இந்த நிலையில் அண்மையில் பாடசாலை நிகழ்வு ஒன்றுக்கு லண்டன் குளோபல் ஸரிட்டியின் ஸ்தாபகர் எஸ்.கோபி கிருஸ்ணாவிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைவாக இந்த ஒலிபெருக்கி சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன.



இது தொடர்பான நிகழ்வு பாடசாலையில் நடைபெற்றன. பாடசாலையின் அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஆசிரியர்கள், குளோபல் ஸரிட்டியின் இணைப்பாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





# விநாயகர் சதுர்த்தி ஆன்மீக எழுச்சி ஊர்வலம்

(பொகவந்தலாவ எஸ். சதீஸ் )

விநாயகர் சதுர்த்தி ஆன்மீக எழுச்சி ஊர்வலம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது. விஜர்னம் கரைத்தலுக்காக கொட்டகலை பகுதியில் இருந்து பத்து இடங்களில் இருந்து விநாயகர் சிலைகள் கொண்டுவரப்பட்டன.

இந்து கலாசார அமைச்சின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆன்மீக எழுச்சி ஊர்வலமானது கொட்டகலை பெரிய மண்வெட்டி தோட்டத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு கொட்டகலை பிரதேச சபைக்கு அருகாமையில் இருந்து இந்த விநாயகர் சதுர்த்தி ஊர்வலம் ஹட்டன் கொட்டகலை பிரதான வீதியின் ஊடாக இடம்பெற்றது.

இந்த விநாயகர் ஊர்வலத்தின் போது காவடி, கோலாட்டம், கும்மி போன்ற



பல்வேறு கலாச்சார நிகழ்களும் ஊர்வலத்தை அலங்கரித்தன. கொட்டகலை மண்வெட்டித் தோட்டத்தில் உள்ள ஸ்ரீவிநாயகர் ஆலயத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்த ஊர்வலமானது கொட்டகலை கொமர்ஷல் பகுதியில் உள்ள வாவிக்குச் சென்று அங்கு இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட 15 சிலைகள் கரைக்கப்பட்டன. இதன் போது பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

இந்த எழுச்சி ஊர்வலத்தில் பெரிய மண்வெட்டி தோட்டம், சின்னவெட்டி தோட்டம், ரொசிட்டா, ஸ்டொனிகிழிப், ஹரீங்டன், லொக்கில், பளிங்குமலை, கல்கந்தை, கொமர்ஷல், தர்மபுரம், மூங்கில் கொட்டகலை, எதன்சைட் ஆகிய தோட்டப் பகுதிகளில் இருந்து சிலைகள் இந்த எழுச்சி பேரணிக்குக் கொண்டு வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.









# பளை பஸ் தரிப்பிடத்தை அபிவிருத்தி செய்வதற்கென விசேட குழு அமைப்பு



பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக 'தூய இலங்கை' நிகழ்ச்சித் திட்டத்தில் பிரதேசத்தில் உள்ள பஸ் தரிப்பிடங்களை அபிவிருத்தி செய்தல் என்ற விசேட அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பளை பஸ் தரிப்பிடத்தை அபிவிருத்தி செய்வதற்காக பிரதேச செயலர் தலைமையில் 20 உறுப்பினர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

குழு உறுப்பினர்களுடனான முதலாவது கலந்துரையாடல் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் இ. த. ஜெயசீலன் தலைமையில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சுரேன் சுப்பிரமணியத்தின் பங்குபற்றுதலுடன் பிரதேச செயலக சிறிய மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

கலந்துரையாடலில் பிரதேச சபை உப தவிசாளர், பளை வர்த்தக சங்கம், பொதுச் சுகாதாரப் பரிசோதகர், கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச சபை மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# யாழ்ப்பாணத்தை ஆக்கிரமிக்கும் மெக்சிகன் கிரீப்பர்!



செ.அனுத்திரா
(ஊடகக் கற்கைகள் துறை)

இருக்க இடம் கொடுத்தா படுக்க பாய் கேக்கிற கதைபோல் ஆகிவிட்டது. என்னடா வயசு போனவங்க மாதிரி சொல்லுறன் என்று நினைக்கிறீங்களா. யாழ்ப்பாணத்தில் அந்நிய நாட்டு தாவரங்களின் வளர்ச்சி இப்பிடித்தான் உள்ளது.

மாலையில் நண்பர்கள் கூடி பொழுது போக்குவது வழமை. சற்றுக் காலாற நடந்த போது, இந்தக் கொடிய எங்கு பார்த்தாலும் அழகாய் இருந்தது. யாழ்ப்பாணத்தில் அதிகமாக எல்லா இடங்களிலும் உள்ளது. அழகாக இருந்தது. சரி என்று அதைப் பற்றித் தேடிப்பார்த்தேன். யாழ்ப்பாணத்தில் பெரும்பாலான இடங்களில் அதிகம் பரவியுள்ள மெக்சிகன் கிரீப்பர் (Mexican creeper). இதன் விஞ்ஞான ரீதியான பெயர் Antigonon leptopus மற்றும் coralvine , Bee



bush, sanmiguelito vine போன்ற பெயர்களைக் கொண்டு அழைக்கப்படுகின்றது.

மெக்சிகோவின் பசுபிக் மற்றும் அட்லாண்டிக் கடலோர சமவெளிகளை பூர்வீகமாகக் கொண்டது. தெற்கு மற்றும் கிழக்கு அமெரிக்கா, ஆசியா, ஆபிரிக்காவிலும் வெப்பமண்டலங்கள் முழுவதும் பரவலடைந்துள்ள ஓர் அலங்கார கொடியாக காணப்படுகிறது.

மெக்சிகன் கிரீப்பர் பரவலானது காற்றின் மூலமும் வீதி ஓரங்களில் அதிகம் காணப்படுவதால் வாகனங்களின் வேகத்துக்குக் காற்றால் அடித்துச் செல்லப்படுகின்ற போது அதிக அளவு பரவப்படுகின்றது. பூக்களின் கவற்சியால் பறவைகள், விலங்குகள், மனிதர்கள் ஈர்க்கப்பட்டு அவற்றின் மூலம் பரவலடைகின்றது.

கொடியின் தண்டு பகுதி தரையை தொடும் போது அதில் இருந்து வேர் ஊன்றி செடியாக மாறிவிடுகின்றது.

இந்தத் தாவரம் சுமார் 30 அடி உயரம் வரையும் வளரக்கூடியது. கொடி அமைப்பு என்பதால் நிமிர்ந்து வளர்வதற்கு ஆதாரமாக அருகில் உள்ள மரங்கள், கட்டடங்கள், பெயர் பலகைகள், பனை மரங்கள், மின்சாரக் கம்பிகள் போன்றவற்றில் பற்றிமுழுமையாக ஆக்கிரமிக்கும் அளவுக்கு விரைவாக வளர்ந்து கொள்கின்றது.

இலைகள் இதய வடிவிலும் முக்கோண வடிவிலும் இருக்கின்றன. அவை மெல்லியதாகவும் பச்சை நிறத்திலும் உள்ளன. மெல்லிய தண்டைக் கொண்டது. இலைகள் முதிர்ச்சி அடையும் போது அந்தத் தாவரத்தைத் தாங்கி நிற்கும் அளவிற்கு வலிமை உடையதாக மாறிவிடுகின்றது.

பூக்கள் பொதுவாக இளம் சிவப்பு, வெள்ளை, சிவப்பு போன்ற நிறங்களில் காணப்படுகின்றன. பூக்கள் கொத்துக் கொத்தாகப் பூத்து தொங்கும் போது மிகவும் அழகாக இருக்கும் இதனால் கவர்ச்சியில் தேனீக்கள், வண்ணத்து பூச்சிகள் போன்றன ஈர்க்கப்படுகின்றன.

யாழ்ப்பாணத்து மண்ணுக்கு உரிய தாவரங்களின் வாழிடங்கள் அவற்றுக்குக் கிடைக்கும் நிலம், நீர், சூரிய ஒளி, காற்று, ஊட்டச்சத்துக்கள் அந்நிய தாவரங்களால் பறிக்கப்படுகின்றன. தாவரங்கள் மருத்துவ செடி, கொடிகள் ஏனைய தாவரங்களுக்கும் போட்டி தன்மைக்கு ஈடு கொடுக்க முடியாமல் அழிந்து போகின்றன. ஏனைய தாவரங்களை விடவும் அவற்றுக்குக் கிடைக்கும் வளங்களை, தான் பயன்படுத்திக் கொண்டு அதிவேகமாக வளர்கின்றது.

இதனால் அந்த நிலத்துக்கே உரிய புல்லினங்கள் அழிவடைகின்றது. ஏற்கனவே வீடுகளில் புற்கள் வளர்வதற்கு நிலம் விடாமல் மூடி கொங்கிரீட் போடப்பட்ட நிலையில் அதையும் மீறி மதில்களுக்குப் புறத்தே வீதியோரங்களில் முளைத்திருக்கும் நம் புற்களை அழித்து விடுகின்றது மெக்சிகன் கிரீப்பர். இவற்றினுடைய அசுர வளர்ச்சியையும் தடுக்க முடியாது என்று கூறமுடியாது. அழகானது என பார்த்து அறிவை தொலைத்து நிற்கின்றது சமூகம்.

இவற்றால் இயற்கை உயிரியல் முறைகளுக்கு ஆபத்து ஏற்படுகின்றது, பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கு இடையூறு ஏற்படுத்திவிடுகின்றது. உயிரின உணவுச் சங்கிலி பாதிப்படைகின்றது. அதிகமாக பரவுவதால் இதனை அகற்றுவது சிரமமாக காணப்படுவதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

கால்நடைகளின் மேய்ச்சல் புல்கள் அழிவடைந்து போவதற்கு காரணமாக உள்ளது. இதனால் மாடுகள் வீதி ஓரங்களில் பொலித்தீன்களையும், உணவக கழிவுகளையும் உண்பதை காணக் கூடியதாக இருந்தது.

வடிகால் அமைப்புகளில் அதிகம் பரவியிருப்பதால் நீர் வாழ் உயிரினங்கள் பாதிப்படைகின்றன. நீர் போக்குவரத்தும் தடைப்படுகின்றது. மனிதர்களுக்கு ஒவ்வாமை, சுவாசப் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. இருப்பினும் சுவர்களில் படருவதால் சுவர்கள் வெயிலிலில் இருந்து பாதுகாக்கப்படுவதோடு சில பூச்சி இனங்களுக்கு உணவாக அமைகின்றது. மெக்சிகோவில் மனிதர்கள் உணவுக்காகவும் மருந்துக்காகவும் எடுத்துக் கொள்வதாக அறியமுடிகின்றது.



மெக்சிகன் கிரீப்பரினுடைய வேர் பகுதியை முற்று முழுதாக நிலத்திலிருந்து அகற்ற வேண்டும். மதில்களில் சிலர் அழகுக்காக விடுவதை தவிர்த்தல் வேண்டும். பூக்கும் முன்னர் கொடியை அகற்றுதல், இரசாயன களைக்கொல்லிகளை பாவித்தல், முற்றாக அழிக்கப்பட்ட இடத்தில் மீண்டும் முளைக்கின்றதா என கண்காணிக்க வேண்டும்.

இதனைத் தொடர்ந்து செய்கின்றபோது நமது பிரதேச புல்லினங்களை பாதுகாத்துக் கொள்ளலாம். “அழகு ஆபத்தானது” நாம் ஒவ்வொருவரும் இது தொடர்பான விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.



# வேலணை மாணவருக்கான கல்விக் கொடுப்பனவு வழங்கல்

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிதியத்தின் பங்களிப்புடன் வேலணைப் பிரதேச மாணவர்களுக்கான கல்விக் கொடுப்பனவு பிரதேச செயலாளர் தனபாலசிங்கம் அகிலன் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டது.

நிகழ்வின் ஒழுங்குபடுத்தலை பிரதேச சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் மேற்கொண்டிருந்தார். நிகழ்வில் உதவிப் பிரதேசசெயலாளர், போதைத் தடுப்பு உத்தியோகத்தர், சமூதாயம் சார் சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர், பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.





# மாவட்ட உணவுப் பாதுகாப்பு வலையமைப்பை மேம்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல்



உணவு பாதுகாப்பு தொடர்பான செயலமர்வு யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

கலந்துரையாடலில் அரச அதிபர் உரையாற்றுகையில்,

உணவு பாதுகாப்பு வலையமைப்பை மேம்படுத்தல் மூலம் வறுமை நிலைமையையும், உணவுப் பாதுகாப்பற்ற விடயங்களையும் அடையாளப்படுத்தித் தரவுகளை சேகரிக்க முடியும். திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது சரியான தரவுகள் அவசியம். தரவுகள் சேகரிப்பு முழுமையடைந்து ஆய்வு செய்யப்பட்டு இவ்வருடத்துக்கான முதலாவது அறிக்கை வெளியிடப்படும். ஆய்வின் மூலம் உரிய திட்டங்களை நடைமுறைப்படுத்த உதவியாகவிருக்கும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உலக உணவுத் திட்டம் பல ஆண்டுகளாக பாரிய பங்களிப்புக்களை வழங்கி வருகிறது. அந்த வகையில் வடக்குக் கிழக்கில் உலக உணவுத் திட்டத்தைக் கையாண்ட அதிகாரி நியூமத்தின் பங்களிப்புப் பாராட்டத்தக்கது. – என்றார்.

உணவு பாதுகாப்பு தொடர்பான திட்டங்களை நடைமுறைப்படுத்த அனைவரது ஒத்துழைப்பையும் நல்குமாறும் கேட்டுக் கொண்டார்.

கலந்துரையாடலில் அமைச்சின் உதவிப் பணிப்பாளர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட புள்ளி விவர பிரதிப் பணிப்பாளர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





# விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய முத்தமிழ் விழாவும் திருவள்ளுவர் தினமும்

மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில் முத்தமிழ் விழாவும் திருவள்ளுவர் தினமும் நாளை மறுதினம் (03) புதன்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

அதிபர் இ. நாகேந்திரன் தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய நிர்வாக அலகின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.ஶ்ரீகுமரனும் சிறப்பு விருந்தினராக வலய அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி விஜிதா சுனில் ஆரியரத்னவும் மதிப்புறு விருந்தினர்களாக கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி ஆசிரியர் சி.சுந்தரமூர்த்தி, வித்தியாலய ஓய்வு நிலை ஆசிரியை திருமதி மா.கந்தையா ஆகியோரும் கலந்து கொள்வர்.



# நெவாட் நிர்வாகக் கட்டடம் யாழ்ப்பாணத்தில் திறப்பு!

நெவாட் நிர்வாக கட்டடத் திறப்பு விழா கியூடெக் – கரித்தாஸ் நிறுவனத்தின் இயக்குநர் யாழ்ப்பாணம் அருட்பணி அன்ரோ டெனிசியஸ் தலைமையில் கடற்கரை வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபனும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மீன்பிடியல் துறைத் தலைவர் கலாநிதி திருமதி எஸ். சுதர்சினியும் கௌரவ விருந்தினர்களாக அருட்பணி கி.ஜெயக்குமார் அடிகள் மற்றும் அருட்பணி ச. இயூஜின் பிரான்சிஸ் அடிகளும் ஆகியோரும் பங்குபற்றினர்.

நிகழ்வானது யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் ஆசியுடன் நடைபெற்றது.





# தென்மராட்சி வலய அதிபர்களுக்குக் கௌரவம்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றிய ஓய்வு பெற்ற, இடமாற்றம் பெற்றுச் சென்ற, பதவியுயர்வு பெற்ற அதிபர்கள் மதிப்பளிப்பு நிகழ்வு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

தென்மராட்சி அதிபர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் கடந்த 2023 தொடக்கம் 2025 ஜூலை வரையான காலப் பகுதியில் இடமாற்றம் ஓய்வு மற்றும் பதவியுயர்வு பெற்ற பத்து அதிபர்கள் மதிப்பளிக்கப்பட்டனர்.

சங்கத் தலைவர் சந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கி. கமலராஜன் கலந்து கொண்டார்.

# ஆனையூரானின் ‘மரியன்னைக்கு மகுடம்’ நூல் சுவிஸில் மன்னார் ஆயரால் வெளியீடு!





ஆனையூரானின் ‘மரியன்னைக்கு மகுடம்’ நூல் மன்னார் மறைமாவட்ட ஆயரால் சுவிஸில் வெளியீடு செய்து வைக்கப்பட்டது.

ஆனையூரான் ஜெராட்டால் மரியன்னைக்கு மகுடம் என்னும் அன்னை மரியாள் பற்றி கவிதைகள் அடங்கிய நூல் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருள்தந்தை அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசத்தால் சுவிஸ் சூரிச் ஆலயத்தில் வைத்து நேற்று (31) வெளியிடப்பட்டது.

ஆலயத்தில் நேற்று ஞாயிறு காலை மன்னார் ஆயர் தலைமையில் நடைபெற்ற திருப்பலியில் திருப்பீடத்தில் மரியன்னைக்கு மகுடம் நூல் வைக்கப்பட்டு திருப்பலி இடம்பெற்றது.





தொடர்ந்து சுவிஸ் கத்தோலிக்க ஆன்மீக பணியகத்தின் இயக்குனர் ஆ. யூட்ஸ் முரளிதரனின் அறிமுக உரையைத் தொடர்ந்து, நூல் ஆய்வுரையை எழுத்தாளர் செல்வம் நிகழ்த்தினார்.

தொடர்ந்து மரியன்னைக்கு மகுடம் நூல் ஆயரால் வெளியிடப்பட்டது. ஆயர் நூல் பற்றி சிறப்புரை நிகழ்த்தினார்.

அதனைத் தொடர்ந்து நூல் ஆசிரியர் ஆனையூரானின் ஜெராட்டின் நன்றி உரையுடன் நிகழ்வு நிறைவுபெற்றது.

நிகழ்வைத் தொடர்ந்து சூரிச் பணியகத்தின் மக்கள் உட்பட பல கத்தோலிக்க மக்கள் அன்னையின் கவிதை நூலைப் பெற்றுக் கொண்டனர்.




# ரூ.30 லட்சம் செலவில் களுவாஞ்சிக்குடியில் பயனாளிகளுக்கான வாழ்வாதார உதவிகள்!

**( வி.ரி.சகாதேவராஜா)**

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான வாழ்வாதார உதவி திட்டங்கள் வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் உ. உதய ஸ்ரீதர் தலைமையில் பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதேச செயலக பிரிவுகளில் பின்தங்கிய பிரதேச மக்களின் வாழ்வாதார அபிவிருத்திக்காக 58 மில்லியன் ரூபா அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் ஒரு கட்டமாக களுவாஞ்சிகுடி பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யபட்ட பயனாளிகளின் வாழ்வாதாரத்தை கட்டி எழுப்பும் முகமாக மூன்று மில்லியன் ரூபா பெறுமதியான வாழ்வாதார உபகரணங்கள் இதன்போது வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு கலந்துகொண்டு பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கினார்.


இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன், உதவி திட்டமிடல் பணிப்பாளர் எஸ் பிரபாகரன், கணக்காளர் வி. நாகேஸ்வரன், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பயனாளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.





# கலாநிதி எஸ்.எல். றியாஸ் எழுதிய 65 நூல்களின் அறிமுக விழா!






(அஸ்லம் எஸ்.மௌலானா)

கலாநிதி எஸ்.எல். றியாஸ் எழுதிய 65 ஆய்வு நூல்களின் அறிமுக விழாவும் புத்தகக் கண்காட்சியும் ஞாயிற்றுக்கிழமை (31) மாலை கல்முனை மயோன் பிளாசாவில் நடைபெற்றன.

ஆசிரியர் எம்.வை. இம்ரான் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் பிரதம அதிதியாகப் பங்கேற்றார். ஜெனீவாவுக்கான இலங்கையின் முன்னாள் வதிவிடப் பிரதிநிதியும் வெளிநாட்டலுவல்கள் இராஜதந்திரியுமான அப்துல் அஸீஸ் சிறப்புப் பேச்சாளராகவும் கலந்து கொண்டிருந்தார்.

அத்துடன் கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.எம். சுபைர், தென்கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாசார பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில், முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், தமிழ்மொழித்துறை பேராசிரியர் றமீஸ் அப்துல்லா, ஐ.சி.எஸ்.ரி. பல்கலைக்கழக பதிவாளர் பி.றி.ஏ. ஹஸன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் அப்துர் ரஸ்ஸாக் ஜவாத் ஆகியோரும் அதிதிகளாக கலந்து கொண்டு உரையாற்றினர்.

கடந்த 25 வருட காலமாக பல்வேறு விடயதானங்களை மையப்படுத்தி கலாநிதி எஸ்.எல். றியாஸ் மேற்கொண்ட ஆய்வுகளின் பிரசவமாகவே ஆங்கில மொழியில் அவர் தொகுத்து எழுதிய இந்த 65 நூல்களும் வெளிவந்துள்ளன. அவை அனைத்தும் நிகழ்வில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

பல்கலைக்கழகம் சாராமல் வெளிவாரியாக ஒருவர் இந்தளவு ஆய்வுகளை மேற்கொண்டு, அதுவும் ஆங்கில மொழியில் எழுதி, வெளியிட்டிருப்பதானது சாதாரண ஒரு விடயமல்ல என்று அதிதிகள் தமதுரைகளில் சுட்டிக்காட்டி, கலாநிதி றியாஸின் அயராத, அறிவாற்றல் முயற்சியை வியந்து பாராட்டினர்.

அத்துடன் கல்முனை பொது அமைப்பினரால் நூலாசிரியர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில் கல்விமான்கள், அரசியல் மற்றும் வர்த்தகப் பிரமுகர்கள், எழுத்தாளர்கள், கலை, இலக்கிய வாதிகள், சிவில் சமூக அமைப்பினர் என்று பல தரப்பினரும் கலந்து கொண்டனர்.

# யோகக்கலை கற்கைநெறி நல்லூரில் ஆரம்பம்!

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகால் உடல், உள மேம்பாட்டுக்காக இலவசமாக நடத்தப்பட்டு வருகின்ற யோகக்கலை அடிப்படை கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலய பின் வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணிமுதல் காலை 8 மணிவரை நடைபெறும் இந்த வகுப்புகளில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ள முடியும்.

சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இந்த அடிப்படைக் கற்கைநெறியைப் பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

பயிலவிரும்புவோரை அன்றைய தினம் நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணைந்து கொள்ளுமாறும் மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

# சில நாடுகள் பயங்கரவாதத்தை வெளிப்படையாக ஆதரிக்கின்றன

## பாக். பிரதமர் முன் மறைமுகமாக சாடினர் மோடி


"சமீபத்தில், ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் பயங்கரவாதத்தின் மோசமான பக்கத்தைக் கண்டோம். இதுபோன்ற சூழ்நிலையில், சில நாடுகள் பயங்கரவாதத்தை வெளிப்படையாக ஆதரிப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதா என்ற கேள்வி எழுவது இயற்கையானது."

- இவ்வாறு ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி உரையாற்றியுள்ளார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (எஸ்.சி.ஓ) கடந்த 2001 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இந்த அமைப்பில் சீனா, ரஷ்யா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், இந்தியா, பாகிஸ்தான், ஈரான், பெலாரஸ் ஆகிய நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

இந்நிலையில், எஸ்சிஓ அமைப்பின் 2 நாள் உச்சி மாநாடு சீனாவின் தியான்ஜின் நகரில் நேற்று தொடங்கியது. இதில் பிரதமர் மோடி பங்கேற்றார். மாநாட்டின் ஒரு பகுதியாக, சீன அதிபர் ஜி ஜின்பிங்கை நேற்று பிரதமர் மோடி சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீஃப்பும் கலந்து கொண்ட 25 ஆவது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உச்சிமாநாட்டில் பேசிய பிரதமர்



மோடி,

"பயங்கரவாதம் என்பது எந்த ஒரு நாட்டின் பாதுகாப்பிற்கும் மட்டுமல்ல, ஒட்டுமொத்த மனிதகுலத்திற்கும் அச்சுறுத்தல் ஆகும்.

கடந்த 40 ஆண்டுகளாக பயங்கரவாதத்தின் தாக்குதலை இந்தியா அனுபவித்து வருகிறது. சமீபத்தில், ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் பயங்கரவாதத்தின் மோசமான பக்கத்தைக் கண்டோம். இந்த துக்க நேரத்தில் எங்களுடன் நின்ற நட்பு நாட்டிற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பயங்கரவாதம் தொடர்பாக எந்த இரட்டை நிலைப்பாடும் ஏற்றுக் கொள்ளத்தக்கது அல்ல என்பதை நாம் தெளிவாகவும் ஒருமனதாகவும் கூற வேண்டும். இந்தத் தாக்குதல் (பஹல்காம்) மனிதநேயத்தில் நம்பிக்கை கொண்ட ஒவ்வொரு நாட்டிற்கும், நபருக்கும் வெளிப்படையான சவாலாக இருந்தது.

இதுபோன்ற சூழ்நிலையில், சில நாடுகள் பயங்கரவாதத்தை வெளிப்படையாக ஆதரிப்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதா என்ற கேள்வி எழுவது இயற்கையானது. அனைத்து வடிவங்களிலும், வண்ணங்களிலும் பயங்கரவாதத்தை நாம் ஒருமனதாக எதிர்க்க வேண்டும். இது மனிதகுலத்திற்கு எதிரான நமது கடமை.

எஸ்.சி.ஓ- வின் பிராந்திய பயங்கரவாத எதிர்ப்பு கட்டமைப்பின் கீழ் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் இந்தியா முன்னணியில் உள்ளது. கூட்டு தகவல் நடவடிக்கையை வழிநடத்துவதன் மூலம் அல்-கொய்தா மற்றும் அதனுடன் தொடர்புடைய பயங்கரவாத அமைப்புகளை எதிர்த்துப் போராட இந்தியா முன்முயற்சி எடுத்தது. பயங்கரவாத நிதியுதவிக்கு எதிராக நாங்கள் எங்கள் குரலை எழுப்பினோம். அதில் உங்கள் ஆதரவிற்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எஸ்.சி.ஓவின் இன் உறுப்பினராக இந்தியா மிகவும் நேர்மறையான பங்கைக் கொண்டுள்ளது. எஸ்.சி.ஓ-விற்கான இந்தியாவின் தொலைநோக்குப் பார்வை மற்றும் கொள்கை என்பது பாதுகாப்பு, இணைப்பு மற்றும் வாய்ப்பு ஆகிய மூன்று முக்கியமான தூண்களை அடிப்படையாகக் கொண்டது." என்று தெரிவித்துள்ளார்.

# அமெரிக்க தயாரிப்புகளை புறக்கணிக்கும் இந்தியர்கள்




அமெரிக்காவின் 50 வீத வரிவிதிப்பால் பெப்சி, கோக-கோலா, மெக்டொனால்ட்ஸ், கே.எப்.சி. உள்ளிட்ட அமெரிக்க தயாரிப்புகளை இந்தியர்கள் புறக்கணிக்க தொடங்கி உள்ளனர்.

ரஷ்யாவிடம் கச்சா எண்ணெய் வாங்குவதாகக் கூறி இந்திய பொருட்களுக்கு அமெரிக்கா 50 வீத வரி விதித்துள்ளது. இது உலக நாடுகளுக்கு விதிக் கும் மிக அதிகபட்ச வரி ஆகும். இதனால் இந்திய பொருள்கள் ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து இந்தியர்கள் மத்தியில் அமெரிக்காவுக்கு எதிரான மன நிலை உருவாகி உள்ளது. குறிப்பாக, பெப்சி, கோக-கோலா, சப்வே, மெக்டொனால்ட்ஸ், கேஎப்சி உள்ளிட்ட அமெரிக்க தயாரிப்புகளை இந்தியர்கள் புறக்கணிக்க தொடங்கி உள்ளனர்.

இதுகுறித்து யோகா குரு பாபா ராம்தேவ் கூறும்போது,

"பெப்சி, கோக-கோலா, சப்வே, கே.எப்.சி, மெக்டொனால்ட்ஸ் உள்ளிட்ட கடைகள் பக்கம் ஒரு இந்தியர்கூட செல்லக்கூடாது. இந்த பிராண்ட்களை பெருமளவில் புறக்கணிக்க வேண்டும். அப்படி நடந்தால் அமெரிக்கா மிகப்பெரிய இழப்பை சந்திக்கும்." என்றார்.

இதனிடையே, உலகின் 3 ஆவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உருவெடுக்க வேண்டுமென்றால், உள்நாட்டு தயாரிப்புகளை வாங்க வேண்டும் என இந்தியர்களை பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தி வருகிறார்.

அமெரிக்காவின் அதிக வரி காரணமாக, பிரான்ஸ், இங்கிலாந்து, கனடா உள்ளிட்ட நாடுகளும் அமெரிக்க பொருள்களை ஏற்கெனவே புறக்கணிக்கத் தொடங்கி விட்டன. இந்த சூழ்நிலையில், 140 கோடி மக்களைக் கொண்ட இந்தியாவும் புறக்கணிக்கும் போது அமெரிக்க நிறுவனங்கள் மிகப்பெரிய இழப்பை சந்திக்கும்.

மெக்டொனால்ட்ஸ் உணவகங்களை மேற்கு மற்றும் தென்னிந்தியாவில் நடத்தும் வெஸ்ட்லைப் புட்வேர்ல்டு கடந்த நிதியாண்டில் 2,390 கோடி இந்திய வருவாய் ஈட்டியது. இது முந்தைய ஆண்டைவிட 5 வீதம் அதிகம்.

இதுபோல பெப்சிகோ நிறுவனம் 8,200 கோடி இந்திய ரூபா வருவாய் ஈட்டி உள்ளது. இந்நிறுவனம் கடந்த 3 ஆண்டுகளில் இந்தியாவில் 3,500 கோடி இந்திய ரூபா முதலீடு செய்தது குறிப்பிடத்தக்கது.



# இந்திய தொலைக்காட்சி நடிகை பிரியா மராத்தே காலமானார்

பிரபல இந்தியத் தொலைக்காட்சி நடிகை பிரியா மராத்தே தனது 38 வய தில் காலமானார்.

அவர் நீண்டகாலமாகப் புற்று நோய் நோயால் பாதிக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏப்ரல் 23, 1987 அன்று மும்பையில் பிறந்த பிரியா மராத்தே, மும்பையில் தனது பாடசாலை கல்வியையும் பல்கலைக்கழக கல்வியையும் நிறைவு செய்தார்.

பின்னர் அவர் யா சுகனோயா மற்றும் சார் திவாஸ் சசுச்சே என்ற மராத்தி சின்னதிரைகளில் நடித்தார்.

அதனைத் தொடர்ந்து பவித்ரா ரிஷ்டா என்ற திரைப்படத்தில் நடித்த தன் மூலம் அவர் பெரும் புகழ் பெற்றார்.




# ஆப்கானிஸ்தானில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்; 600 பேர் பலி; 1500 இற்கு மேற்பட்டோர் காயம்

ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதியில் பாகிஸ்தான் எல்லைக்கு அருகே நேற்று ஞாயிற்றுக் கிழமை இரவு 6.0 ரிக்டர் அளவிலான நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது.

8 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தினால் குறைந்தது 600 பேர் உயிரழந்துள்ளனர். 1500 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமாபாத் வரை உணரப்பட்ட இந்த நிலநடுக்கம், மையப்பகுதியிலிருந்து 300 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள தொலைதூர மலைப்பகுதிகளில் பரவலான சேதத்தை ஏற்படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குனார் மாகாணத்தின் நோர்கல் மாவட்ட மசார் பள்ளத்தாக்கில் பல வீடுகள் நிலநடுக்கத்தால் இடிபாடுகளுக்குள் புதைந்துவிட்டதாக தலிபான் அரசாங்கத்தின் பல வட்டாரங்கள் தெரிவித்தன என பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது. மீட்புப் பணிகள் தொடரும்போது இறப்பு எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் அதிகாரிகள் கூறுகின்றனர்.


அதேநேரம், மனிதாபிமான அமைப்புகளிடமிருந்து அவசர உதவிக்கு தலிபான் அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். பாதிக்கப்பட்ட சில கிராமங்களை விமானம் மூலம் மட்டுமே அடைய முடியும்.

இப்பகுதியில் உள்ள வைத்திய சாலைகள் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளித்து வருகின்றன.

அதே நேரத்தில் குடியிருப்பாளர்கள் உயிர் பிழைத்தவர்களைத் தேடி இடிந்து விழுந்த கட்டமைப்புகளில் அகழ்வுப் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

2023 ஒக்டோபர் மாதம் மேற்கு ஆப்கானிஸ்தானைத் தாக்கிய 6.3 ரிக்டர் அளவிலான சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் 2,000 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இது அண்மைய ஆண்டுகளில் ஆப்கானை தாக்கிய மிக மோசமான நிலநடுக்கங்களில் ஒன்றாகவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.






# இஸ்ரேல் தாக்குதலில் ஹமாஸின் ஆயுதப் பிரிவின் பேச்சாளர் பலி

காசா நகரில் நடத்தப்பட்ட வான் வழித் தாக்குதலில் ஹமாஸின் ஆயுதப் பிரிவின் பேச்சாளரான அபு ஒபைடா கொல்லப்பட்டுள்ளார் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ், இதனைத் தெரிவித்துள்ளார். எனினும் ஹமாஸ் அவரது மரணத்தை உறுதிப்படுத்தவில்லை.

இந்தநிலையில் காசாவில் ஒரு குடியிருப்பு கட்டடத்தின் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதல்களில் பல பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என ஹமாஸ் தெரிவித்துள்ளது.

காசா நகரத்தின் அடர்த்தியான மக்கள் தொகை கொண்ட அல்-ரிமல் சுற்றுப்புறத்தில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

காசா நகரத்தை முழுமையாகக் கைப்பற்ற இஸ்ரேலிய திட்டத்தின் ஒரு பகுதியாகவே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கனடா முரசு
திங்கட்கிழமை | 01/09/2025

காற்றின் தரம் தொடர்பில் அல்பர்டாவில் எச்சரிக்கை

02



# கனடாவில் நிகழ்த்தப்பட்ட கின்னஸ் உலக சாதனை

**கனடாவில் மலையேற்ற நடை பயணத்தில் கின்னஸ் உலக சாதனை படைக்கப்பட்டுள்ளது.**

**கனடாவின் வெஸ்ட் வான்கூவரில் கடந்த சனிக்கிழமை நீண்ட விடுமுறை தினத்தின் வெயிலில் ஆயிரக்கணக்கான வெளிப்புற விளையாட்டு ஆர்வலர்கள் ஒன்று கூடி, ஒரே நேரத்தில் அதிகமானோர் மலையேற்ற நடைப்பயணம் செய்த உலக சாதனையை முறியடித்தனர்.**

உலகின் மிகப் பெரிய மலையேற்றம் எனப் பெயரிடப்பட்ட இந்த நிகழ்வை நியூசிலாந்தைச் சேர்ந்த வெளிப்புற உடை உற்பத்தி நிறுவனம் காத்மான்டு கனடாவில் தனது அறிமுகத்தை கொண்டாடும் விதமாக ஏற்பாடு செய்தது.

சுமார் 2,500 பேர் பதிவு செய்திருந்த நிலையில், 1,500 முதல் 2,000 பேர் வரை Cypress மலைக்குச் சென்று நான்கு கிலோ மீற்றர் தூரம் ஸ்கை செயார் Sky Chair உச்சிவரை ஏறினர் என காத்மான்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன்மூலம், 2023 ஆம் ஆண்டு ஈராக் குர்திஸ்தானில் 815 பேர் ஒன்றாக ஏறிய சாதனையை வான்கூவர் மக்கள் முறியடித்துள்ளனர்.

கின்னஸ் உலக சாதனை அதிகாரிகள் சரியான எண்ணிக்கையை இன்னும் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

இந்த உலகச் சாதனை முயற்சியின் மூலம் சில சமூக நல அமைப்புகளுக்கு நிதி திரட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் பங்கேற்றவர்களில் பலர், சமூகமே ஒன்றிணைந்து ஆரோக்கியமான செயலில் பங்கேற்பது மகிழ்ச்சி தருகிறது என தெரிவித்துள்ளனர்.

# கரடி வேட்டையில் ஈடுபட்ட சுற்றுலாவிகளுக்கு அபராதம்

கனடாவில் சட்டவிரோத கரடி வேட்டையில் ஈடுபட்ட சுற்றுலா விடுதிகளுக்கு நீதிமன்றம் அபராதம் விதித்துள்ளது.

வடமேற்கு ஒன்டாரியோவில் கருப்பு கரடி வேட்டையாடல் தொடர்பான சட்ட மீறலுக்கு 5 சுற்றுலா விடுதிகள் மீது மொத்தம் 64,000 டொலர் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஒன்டாரியோ நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட வழக்கில், டிம்பர்லேன் லாஜ் நிறுவனம் அனுமதி இல்லாமல் கறுப்பு கரடி வேட்டைச் சான்றிதழ்களை பிற விடுதிகளுக்கு விற்பனை செய்



தமை உறுதிசெய்யப்பட்டது.

இதன் மூலம் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் சட்டவிரோத வேட்டைகளில் ஈடுபட்டமை நிரூபிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் டிம்பர்லேன் லாஜ் மீது 17,500 டொலர் அபராதம் விதிக்கப்பட்டது.

அதேபோல், கனடா நார்த் லாஜ் மீது 23,000 டொலர், லிட்டில் கனடா கேம்ப் மீது 12,000 டொலர், மற்றும் ராகி ஷோர் அட்வென்சர்ஸ் மீது 10,000 டொலர் அபராதம் விதிக்கப்பட்டது.

மேலும், கபீலோ லாஜ் இன்க். தனது உரிமம் விதிமுறைகளை மீறி வெளிநாட்டு பயணிகளுக்கான சட்டவிரோத கரடி வேட்டை நடத்த அனுமதித்ததாக நீதிமன்றம் கண்டறிந்து 1,500 டொலர் அபராதம் விதித்தது. இந்த வழக்குகள் 2024 மற்றும் 2025-இல் கெனோரா மற்றும் ரெட் லேக் நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட்டன.




# அமெரிக்க வரியால் பாதிக்கப்பட்ட கனடிய பழங்குடியின வியாபாரங்கள்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்த புதிய சுங்க கொள்கை காரணமாக, சில சிறிய பழங்குடியின கனடிய வியாபாரிகள் அமெரிக்காவுக்கு பொருள்கள் அனுப்புவதை நிறுத்தியுள்ளனர்.

முன்பு 800 அமெரிக்க டொலர் மதிப்புக்குக் குறைவான பொருள்கள் சுங்க சோதனை இல்லாமல் அனுமதிக்கப்பட்ட நிலையில், இப்போது புதிய விதிகளின் அடிப்படையில் 10 முதல் 50 சதவீதம் வரி விதிக்கப்படுகிறது.

பூர்வீக மக்களின் வர்த்தக உரிமைகள் மற்றும் உடன்படிக்கைகள் மதிக்கப்பட வேண்டும் என கனேடிய பழங்குடியின வியாபார கவுன்சிலின் துணைத் தலைவர் மேத்யூ ஃபாஸ் வலியுறுத்தியுள்ளார்.

ஆனால் சுங்க விலக்கு பெற தேவையான ஆவணங்கள் சிறிய வியாபாரிகளுக்கு சுமையாக உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

நிபுணர்கள், இந்த கொள்கை பூர்வீக வியாபாரிகளின் பொருளாதார நிலையை சிக்கலாக்கும் என எச்சரித்துள்ளனர்.



# காற்றின் தரம் தொடர்பில் அல்பர்டாவில் எச்சரிக்கை

கனடாவின் வட அல்பெர்டா மற்றும் எட்மண்டன் பிராந்தியத்தில் காட்டுத் தீ புகை காரணமாக காற்றுத் தரம் தீவிரமாக பாதிக்கப்பட்டுள்ளது. கனடிய சுற்றாடல் திணைக்களம் இந்த எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.

எட்மண்டனில் புகை காரணமாக காற்றுத் தரம் மிகவும் மோசமாகவும், காட்சி திறன் குறைவாகவும் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே ஞாயிற்றுக் கிழமை முழுவதும் எட்மண்டனில் புகை மூட்டம் நிலவிய நிலையில், இது இரவு முழுவதும் நீடிக்கும் எனவும், காற்றுத் தர சுகாதார குறியீட்டில் 10+ என்ற அளவுக்கு உயரக்கூடும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது.

அந்த பிரதேச மக்களை, வெளியில் செலவிடும் நேரத்தை குறைக்கவும், ஜன்னல்கள் மற்றும் கதவுகளை மூடியிருக்கவும் அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். குறிப்பாக குழந்தைகள், முதியோர், மேலும் நீண்டகால சுவாச நோய் உள்ளவர்கள் வெளியில் கடுமையான உடற்பயிற்சி செய்வதை தவிர்க்குமாறு எச்சரிக்கப்பட்டுள்ளது.

65 வயதுக்கு மேற்பட்டவர்கள், குழந்தைகள் மற்றும் உடல்நலப் பிரச்சினைகள் கொண்டவர்களுக்கு இது அதிக பாதிப்பை ஏற்படுத்தும் அபாயம் உள்ளதெனவும், ஆனால் அனைவருக்கும் இதன் தாக்கம் இருக்க முடியும் எனவும் எச்சரிக்கை வலியுறுத்துகிறது.

மேலும், அல்பெர்டா மாகாணத்தின் பெரும்பாலான பகுதிகளில் இன்னும் வெப்ப அலை எச்சரிக்கை அமலில் உள்ள நிலையில், சூடான காலநிலையில் புகை மாசு அதிகரிக்கும் போது மக்கள் குளிர்ச்சியை பராமரிக்க முன்னுரிமை கொடுக்க வேண்டும் என அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.



# பிரிட்டிஷ் கொலம்பியாவில் காட்டுத் தீ பரவல் அதிகரிப்பு

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவில் வெப்பமும் வறட்சியும் நீடிப்பதால் காட்டுத் தீ பரவல்கள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.

ஞாயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி மாகாணம் முழுவதும் 142 காட்டுத் தீ சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

கடந்த புதன்கிழமை பதிவு செய்யப்பட்ட 68 தீ விபத்துகளை விட இருமடங்காக அதிகரித்துள்ளது.

இவற்றில் சுமார் 80 சதவீதம் மின்னல் தாக்கத்தால் ஏற்பட்டவையாகும் என அதிகாரிகள் கூறியுள்ளனர்.

எனினும் ஞாயிற்றுக்கிழமைக்குப் பிறகு மின்னல் அபாயம் குறையும் என்றும், வெப்பநிலை தொடர்ந்து அதிகமாக இருந்தாலும் கடற்கரை பகுதிகளில் சிறிதளவு மழை பெய்யக்கூடும் எனவும் எதிர்வுகூறப்பட்டுள்ளது.

காட்டுத் தீகள் அதிகரித்ததையடுத்து, மாகாணத்தின் பல இடங்களில் சிறப்பு எச்சரிக்கை அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.



பாதிக்கப்பட்ட பகுதிகள் அடுத்த 48 மணிநேரம் வரை காட்டுத் தீ புகைமூட்டத்தால் பாதிக்கப்படக்கூடும் என கனடிய சுற்றாடல் திணைக்களம் எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.

